# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

**OS.No.**68/2019

| பெயர் | | திருமதி ரமாசித்ரா | ஊர் | : | மதுரை |
|---|---|---|---|---|---|
| த.பெ. | : | திரு.சோமசுந்தரம் | மாவட்டம் | : | மதுரை |
| வயது | : | 38 | தொழில் | : | ஆவண ஆய்வு நிபுணர் |

2026ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8-ஆம் நாள் **பி.சா. 2 ன்** வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54-வது விதியின் 95வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.D.சுரேந்தர் மொழிபெயர்ப்பாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மதுரை வட்டாரா தடய அறிவியல் ஆய்வகத்தில் ஆவண ஆய்வு பிரிவில் அறிவியல் அலுவலர் மற்றும் ஆவண அலுவலர் ஆக பணியாற்றி வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து கிடைக்கபெற்ற கோப்பு எங்கள் அலுவலகத்தால் கடந்த 10.09.2025 அன்று பெறபட்டு அது எங்கள் அலுவலகத்தில் பதிவாகி எங்கள் பிரிவிற்கு ஆய்வுக்கு வந்தது. துணை இயக்குநர் மேற்படி கோப்பை எங்களுக்கு அனுப்பிவைத்தார் அதை நானும், திருமதி. உமா மற்றும் திரு. A.காஜாமைதீன் ஆகியோர் கூட்டாய்வு மேற்கொண்டும் அவ்வாறு மேற்கொண்டு அதிலுள்ள ஒப்புகொள்ளபட்ட கையெழுத்துக்களை A வகையில் குறியீடு செய்தும் கேள்விகுறி கையெழுத்துக்களை Q வகையில் குறியீடு செய்தும் ஆய்வு மேற்கொண்டு மூவரும் ஒத்த முடிவுக்கு வந்து ஒப்புகொள்ளபட்ட A வகை கையெழுத்துக்கள் Q வகை கையெழுத்துகளுடன் ஒத்துபோகாததால் ஒத்து போகவில்லை என்று முடிவு வந்து ஆய்வு காரணத்தாளுடன் சேர்த்து அறிக்கையை தயார் செய்து அறிக்கை எண் 9174/2025 ஆக பதிவு செய்து அந்த அறிக்கையை இந்நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தோம். தற்போது என்னிடம் காண்பிக்கபடும் அறிக்கை மற்றும் காரணத்தாள் நாங்கள் அனுப்பியதுதான் அது C1 வரிசை 4 தாள்கள் உடையது. பிரதிவாதி தரப்பு சான்றாவணம் B 8லுள்ள கோவிந்தராசு என்கிற கையெழுத்து A1 ஆகவும், வா.சா.ஆ.16 லுள்ள ஒப்புகொள்ளபட்ட கையெழுத்து A2 ஆகவும், Memorandum of deposit of title deed என்ற ஆவணத்தின் நகல் பி.சா.ஆ.10லுள்ள

கோவிந்தராசு என்ற கையெழுத்து A3 முதல் A10 ஆக குறியீடு செய்யபட்டது. வா.சா.ஆ.1 கடனுறுதி சீட்டிலுள்ள கோவிந்தராசு என்ற கையெழுத்து Q1 ஆக குறியீடு செய்யபட்டது. அதிலுள்ள மற்றொரு கையெழுத்தான சதானந்தபதி என்ற கையெழுத்து Q2 ஆக குறியீடு செய்யபட்டது. பிரதிவாதி தரப்பு சான்றாவணம் 7லுள்ள சதானந்தபதி என்ற கையெழுத்து A11ஆகவும், பிரதிவாதி தரப்பு சான்றாவணம் 9லுள்ள சதானந்தபதி என்ற கையெழுத்து A12 முதல் A22 வரை குறியீடு செய்தோம். Memorandum of deposit of title deed என்ற ஆவணத்தின் நகல் பி.சா.ஆ.10லுள்ள சதானந்தபதி என்ற கையெழுத்து A23 முதல் A29 ஆக குறியீடு செய்யபட்டது. வாதி தரப்பு சான்றவாணம் 15லுள்ள சதானந்தபதி கையெழுத்து A30 குறியீடு செய்யபட்டது. மேற்கண்ட A ஆவணங்களை Q ஆவணங்களுடன் ஒப்பிட்டு பார்த்ததில் A1,2,3 to 10 நகல் ஆவணங்களில் உள்ள ஒப்புகொள்ளபட்ட கையெழுத்திட்ட நபர் Q1 என்று குறியீடு செய்யபட்ட கையெழுத்தை இடவில்லை என்று முடிவு கண்டு அறிக்கை கொடுத்துள்ளேன். அதேபோல் A11,12 முதல் 29 வரையிலான நகல் ஆவணங்களில் உள்ள ஒப்புகொள்ளபட்ட கையெழுத்திட்ட நபர் Q2 என்று குறியீடு செய்யபட்ட கையெழுத்தை இடவில்லை என்று முடிவு கண்டு அறிக்கை கொடுத்துள்ளேன்.

<u>குறுக்குவிசாரணை</u>

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி
தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,
மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்
காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று
ஒப்புக்கொள்ளப்பட்டது.

NAGARAJAN Digitally signed by NAGARAJAN Date: 2026.04.09 13:58:56 +0530

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.